**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 100/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | திரு. ராமகிருஷ்ணன் |
| Father's Name/Husband Name: | திரு. வீரமுத்து |
| Village : | வெண்கலம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 49/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 20.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 4 ஆஜர் இல்லை கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி 2 மற்றும் 3 இறந்தார்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஜெயசீலியை தெரியும். எதிரிகள் அனைவரையும் தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து போலிசார் விசாரிப்பதற்காக வந்தனர். போலிசார் விசாரித்தபோது படம் போட்டு என்னிடம் கையெழுத்து கேட்டனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் வழக்கு போட்டிருப்பதாகவும் வந்து விசாரிப்பதற்காக கையெழுத்து போடும்படி கேட்டுக்கொண்டதால் நான் போட்டுக் கொடுத்தேன். போலிசார் அ.சா.1 வீட்டிலிருந்து குச்சி ஒன்று வாங்கிச் சென்றனர். அந்த குச்சி ஈட்டி போன்று பாம்பு கொத்தும் குச்சியாகும். அந்தக் குச்சியை கைப்பற்றியதற்காக நான் கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தனர் என்றும், கடந்த 20.04.2013 அன்று மதியம் 3 மணியளவில் போலிசார் என் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர் என்றும், அந்த பார்வை மகஜரில் நான் சாட்சி கையொப்பமிட்டேன் என்றும் அதற்கு ஆதரவாக நான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் வீட்டிலிருந்து 4–5 வீடுகள் தள்ளி குடியிருக்கிறார்கள். எதிரிகள் எங்கள் வீட்டின் அருகில் குடியிருப்பதால் அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து 2 நாட்கள் கழித்து தான் போலிசார் என்னை விசாரணை செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. குச்சி ஈட்டி போன்று பாம்பு கொத்தும் குச்சியை யாரிடமிருந்து கைப்பற்றினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பமிட்ட தாளில் எத்தனை நபர்கள் கையொப்பமிட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் ஆனால் என்னுடன் இருந்த ஒரு நபர் கையொப்பமிட்டார்.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.